## ‘பசுமையான பூமி என்னாலே தொடங்கும்’ மிதிவண்டிப் பயண நிறைவு விழா:

# அடுத்த தலைமுறைக்கு பாதுகாப்பான சுற்றுச்சூழலைக் கொடுப்பது நமது கடமை!

## சென்னை, சாந்தோம் பள்ளியில் நடைபெற்ற விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

சென்னை,நவ.22-

**சென்னை, சாந்தோம் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெற்ற, தமிழ்நாடு துறவியர் பேரவை ஏற்பாட்டில் ,சுற்றுச்சூழல் பாதுகாப்பை வலியுறுத்தி, கன்னியாகுமரி முதல் சென்னை வரையிலான ‘பசுமையான பூமி என்னாலே தொடங்கும்’ என்ற மிதிவண்டிப் பயணத்தின் நிறைவு விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு வாழ்த்திப் பேசினார்.**

**அப்போது அவர், ``அடுத்த தலைமுறைக்கு பாதுகாப்பான ஒரு சுற்றுச்சூழலை நாம் ஏற்படுத்திக் கொடுக்க முடியும். அதை நாம் செய்வது நமக்கு பெருமை கிடையாது, அது நம்முடைய கடமை என்று குறிப்பிட்டார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு:**

‘பசுமையான வழி என்னால் தொடங்கும்’ என்ற விழிப்பு உணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் நோக்கத்துடன் கன்னியாகுமரி முதல் சென்னை வரை நடைபெற்ற மிதிவண்டிப் பயணத்தின் நிறைவு விழாவில் பங்கேற்று, உங்கள் அனைவரையும் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

### இயற்கை வளங்கள்

நாம் அனைவரும் எந்தவிதச் சிரமமும் இன்றி ஆக்சிஜனைச் சுவாசிக்கின்றோம். இயற்கையாகவே அது நமக்குக் கிடைத்துக் கொண்டிருக்கிறது. அந்த ஆக்சிஜன் நம்மைச் சுற்றியுள்ள இயற்கை வளங்கள், மரங்கள் மூலமாகவே நமக்குக் கிடைக்கின்றது. ஆனால், ஒருவேளை எதிர்காலத்தில் அந்த ஆக்சிஜன் பற்றாக்குறை ஏற்பட்டால், நம்முடைய நிலைமை என்ன ஆகும் என்பதை நாம் யோசித்துப் பார்க்க வேண்டும்.

சுமார் நான்கு ஆண்டுகளுக்கு முன்பு கொரோனா காலத்தில் நாம் ஒவ்வொருவரும் ஆக்சிஜன் சிலிண்டருக்காக எவ்வளவு பாடுபட்டோம், எவ்வளவு தட்டுப்பாடு நிலவியது என்பதைக் கண்கூடாகப் பார்த்தோம். அதையும் நாம் மனதில்கொள்ள வேண்டும்.

இதை உணர்ந்து, நாம் ஒவ்வொருவரும் இயற்கையைப் பாதுகாக்க வேண்டும், மரங்களை வளர்க்க வேண்டும், மரங்களையும் காக்க வேண்டும். தற்போது, இந்தியாவின் தலைநகர் டெல்லியில் கடுமையான மாசு ஏற்பட்டிருப்பதால், சுவாசப் பிரச்சினை உள்ளது. நம் தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, நாம் பாதுகாப்பான ஓர் இடத்தில் இப்போது இருக்கிறோம்.

### மகிழ்ச்சிக்குரிய செய்தி

சுற்றுச்சூழல் பாதுகாப்பில், இன்றைக்குப் பெரியவர்களை விட, இங்கு வந்திருக்கக்கூடிய இளைஞர்கள், குழந்தைகள் நீங்கள் மிகவும் அக்கறையாக இருப்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும். இப்படி ஒரு நிகழ்வை நடத்துவது மட்டுமல்லாமல், இந்த மிதிவண்டிப் பயணத்தில் கலந்துகொண்ட அத்தனை இளைஞர்களுக்கும், மாணவச் செல்வங்களுக்கும் மீண்டும் என்னுடைய பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கு என்னை வரவேற்ற குழந்தைகளுக்கும் என் சிறப்புப் பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் உரித்தாக்கிக் கொள்கிறேன்.




நம் தலைமுறையை விட, நமக்கு அடுத்து வருகின்ற தலைமுறை விழிப்பு உணர்வுடனும், இந்த இயற்கையைப் பாதுகாக்கின்ற விஷயத்தில் கூடுதல் கவனத்துடனும் இருப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது. நிறைய பெரியவர்கள் பொறுப்பில்லாமல் குப்பைகளை சாலையில் தூக்கிப் போட்டுவிட்டுச் சென்றுவிடுவார்கள். பலர் கால்வாய்களிலும், வாய்க்கால்களிலும் போட்டுவிடுவார்கள். ஆனால், குழந்தைகள் என்றைக்கும் அந்தமாதிரி தவறைச் செய்யவே மாட்டார்கள். இப்போது நிறைய பள்ளிக்கூடங்கள் ‘சூழலியல் மன்றம்’ ஈக்கோ கிளப் என்று தொடங்கி இருக்கின்றன. அதில் ஆசிரியப் பெருமக்கள் பள்ளியிலேயே குழந்தைகளுக்குப் பல விஷயங்களைக் கற்றுக்கொடுக்கிறார்கள்.

### பூமியின் வெப்பம்

இன்றைக்குச் சுற்றுச்சூழல் பிரச்சினை, உலகிலேயே மிகப்பெரிய ஒரு பிரச்சினையாகவும், மிகப்பெரிய ஒரு அச்சுறுத்தலாகவும் இருக்கின்றது. புவி வெப்பமயமாதலால் (குளோபல் வார்மிங்) பூமியின் வெப்பம் ஒவ்வொரு நாளும் அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. நாம் பயன்படுத்தும் பல பொருட்களில் இருந்தும், பெரிய பெரிய தொழிற்சாலைகளில் இருந்தும் வெளியேறும் கார்பன் காரணமாகவே, இன்றைக்கு பூமியின் வெப்பம் கூடிக்கொண்டே செல்கிறது. அதனால்தான் வழக்கத்துக்கு மாறாக, கடந்த ஆண்டுகளில் நிறைய இயற்கைச் சீற்றங்கள் வந்துகொண்டிருக்கின்றன.

ஒவ்வொரு வருடமும் மிகப்பெரிய வெள்ளம் வருகிறது, மிகக் கடுமையான மழை பெய்கிறது, சில சமயம் வறட்சி ஏற்படுகிறது. இப்படிப்பட்ட காலநிலை மாற்றப் பிரச்சினைகள் கடந்த சில ஆண்டுகளாக அதிகரித்து வருகின்றன.

இந்தியாவில் மட்டும் இந்தப் பிரச்சினை இல்லை. இன்றைக்கு உலகம் முழுவதும் உள்ள நாடுகளில் பல நகரங்களில் அதிகமான மழை பெய்து கொண்டிருக்கிறது. இதற்கெல்லாம் அடிப்படைக் காரணமே கார்பன் உமிழ்வு (கார்பன் எமிஷன்) என்பதுதான். அதனால்தான் இப்போது நாம் நிறைய மின் வாகனங்களைப் பயன்படுத்தத் தொடங்கியிருக்கிறோம். இது சுற்றுச்சூழலுக்கு மற்றவற்றை விட மிகப்பெரிய பாதுகாப்பானது.

இன்றைக்கு தமிழ்நாடு அரசு சார்பாகவும் நிறைய மின் பேருந்துகளை இயக்கிக்கொண்டு இருக்கிறோம். மின்சாரம் தயாரிப்பதில்கூட, இப்போது பசுமை ஆற்றலுக்குத்தான் நம்முடைய அரசு அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகிறது.

நாம் இதையெல்லாம் செய்கிறோம் என்றால், நமக்கு அடுத்து வரக்கூடிய வருங்கால சந்ததியினர் சிறப்பாக வாழ வேண்டும், வளமாக வாழ வேண்டும் என்ற அந்த ஒரே அடிப்படையில்தான். சோலார் எனர்ஜி (சூரிய ஆற்றல்), விண்ட் எனர்ஜி (காற்றாலை ஆற்றல்) ஆகியவற்றில் இன்றைக்கு தமிழ்நாடு அரசு கூடுதல் கவனம் செலுத்தி வருகிறது.

இந்தியாவிலேயே சுற்றுச்சூழலைப் பாதுகாக்க, அதிக முன்னெடுப்புகளை எடுக்கின்ற மாநிலம் நம்முடைய தமிழ்நாடுதான் என்பதைப் பெருமையாக நான் உங்கள் முன்பு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சுற்றுச்சூழல் பாதிப்பால் நம்மைச் சுற்றி நடக்கின்ற மாற்றங்களை நாம் அனைவரும் தெரிந்துகொள்ள வேண்டும், புரிந்துகொள்ள வேண்டும். அப்போதுதான் நம்முடைய அடுத்த தலைமுறைக்கு பாதுகாப்பான ஒரு சுற்றுச்சூழலை நாம் ஏற்படுத்திக் கொடுக்க முடியும். அதை நாம் செய்வது நமக்கு பெருமை கிடையாது, அது நம்முடைய கடமை.




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.11.2025) சென்னை சாந்தோம் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் தமிழ்நாடு துறவியர் பேரவை சார்பில் நடைபெற்ற சுற்றுச்சூழல் பாதுகாப்பை வலியுறுத்தி கன்னியாகுமரி முதல் சென்னை வரையிலான ‘பசுமையான பூமி என்னாலே தொடங்கும்’ என்ற மிதிவண்டிப் பயணத்தின் நிறைவு விழாவில் மிதிவண்டிப் பயணத்தில் ஈடுபட்ட மாணவ, மாணவிகளை பாராட்டி பரிசுகளை வழங்கினார். இந்நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர்கள் முனைவர் இனிகோ இருதயராஜ். மயிலை த. வேலு, சென்னை மயிலை உயர்மறை மாவட்ட தலைவர் பேராயர் ஜார்ஜ் அந்தோணிசாமி, தமிழக துறவியர் பேரவை தலைவர் முனைவர் மரிய பிலோமி, மாநில திட்டக்குழுவின் உறுப்பினர் பேராசிரியர் சுல்தான் அகமது இஸ்மாயில், தலைமை அன்னை எம். ஆரோக்கியம், தமிழக துறவியர் பேரவை செயலாளர் நம்பிக்கை மேரி, நிர்வாகக் குழு உறுப்பினர் அன்னை பபீலினெட், பேரவையின் சூழ்நிலையியல் ஆர்வலர் குழு ஒருங்கிணைப்பாளர் அருட்சகோதரி பௌலின் அக்னஸ், அருட்தந்தை பார்த்தசாரதி உள்பட பள்ளி மாணவிகள் உடனிருந்தனர்.

### புதிய புதிய பூங்காக்கள்

இன்றைக்கு சென்னையில் நம்முடைய முதலமைச்சர் அவர்களின் முயற்சியால் புதிய புதிய பூங்காக்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. இங்கு பக்கத்தில் உள்ள செம்மொழிப் பூங்காவை சில வாரங்களுக்கு முன்பு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள். அதேபோல், தொல்காப்பியர் பூங்கா, கிண்டி பூங்கா என்று ஒவ்வொரு பகுதிக்கும் நம் முதலமைச்சர் அவர்கள் பூங்காக்களைப் புதிதாக உருவாக்கி வருகிறார்.

நமக்கு பசுமையான சூழல் வேண்டுமா, இல்லை வறட்சியான சூழல் வேண்டுமா என்பது நாம் ஒவ்வொருவரின் செயல்பாட்டில்தான் இருக்கிறது. இன்னும் குறிப்பாக சொல்ல வேண்டுமென்றால், இந்த அரங்குக்கு வரவேண்டிய சாலையின் பெயரே பசுமை வழிச் சாலைதான். அதனால் இந்தச் சாலை மட்டுமல்ல, ஒட்டு மொத்தத் தமிழ்நாட்டையும் பசுமை வழியில் அழைத்துச் செல்ல நாம் அனைவரும் அனைத்து முயற்சிகளிலும் ஈடுபடுவோம் என்று இந்த நேரத்தில் உங்களை எல்லாம் கேட்டுக்கொள்கிறேன்.

உங்களின் அனைத்து முன்னெடுப்பு களுக்கும் நம்முடைய திராவிட மாடல் அரசு, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் துணையாக இருப்பார் என்பதைச் சொல்லி, இந்த விழிப்பு உணர்வுப் பேரணியில் ஈடுபட்ட அத்தனை இளைஞர்களுக்கும், மாணவச் செல்வங்களுக்கும், மாணவிகளுக்கும் மீண்டும் என் வாழ்த்துகளைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்திப் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

சட்டமன்ற உறுப்பினர்கள் இனிகோ இருதயராஜ், மயிலை வேலு, மயிலை மறை மாவட்டத்தின் தலைவர் பாதிரியார் ஜார்ஜ் அந்தோணி சாமி, தமிழகத் துறவியர் பேரவைத் தலைவர் முனைவர் மரிய ஃபிலோமி, மாநிலத் திட்டக்குழு உறுப்பினர் பேராசிரியர் சுல்தான் அகமது இஸ்மாயில், ஆரோக்கியம், தமிழகத் துறவியர் பேரவைச் செயலாளர் நம்பிக்கை மேரி, நிர்வாகக் குழு உறுப்பினர் மதர் பெசிலினட், பேரவையின் சூழ்நிலையியல் ஆர்வலர் குழு ஒருங்கிணைப்பாளர் சிஸ்டர் பவுலின் ஆக்னஸ், ஃபாதர் பார்த்த சாரதி, பகுதி கழகச் செயலாளர் முரளி, மாமன்ற உறுப்பினர் ரேவதி உள்ளிட்ட பலரும் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

---

# கரூர் மாவட்டச் செயற்குழு ஆலோசனைக் கூட்டம்

## மாவட்டக் கழகச் செயலாளர் வி. செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. அறிக்கை!

கரூர், நவ. 22-

கரூர் மாவட்டச் செயலாளர் வி.செந்தில்பாலாஜி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



கரூர் மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் இன்று (22.11.2025 - சனிக்கிழமை) மதியம் 12.00 மணிக்கு கரூர் மாவட்டக் கழக அலுவலகம் (கலைஞர் அறிவாலயம்) தளபதி அரங்கில் மாவட்டக் கழக அவைத் தலைவர் டி.ராஜேந்திரன் தலைமையிலும், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் கே.சி.பழனிச்சாமி, கழக நெசவாளர் அணி தலைவர் நன்னியூர் ராஜேந்திரன், கழக சட்டத்துறை இணைச் செயலாளர் என்.மணிராஜ், கழக நெசவாளர் அணி செயலாளர் பரணி கே.மணி, குளித்தலை சட்டமன்ற உறுப்பினர் இரா.மாணிக்கம் எம்.எல்.ஏ., அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் பி.ஆர்.இளங்கோ எம்.எல்.ஏ., கிருஷ்ணராய புரம் சட்டமன்ற உறுப்பினர் க. சிவகாமசுந்தரி MLA, கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் கரூர் முரளி, கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணை செயலாளர் முனவர் ஜான், கழக வர்த்தக அணி துணை செயலாளர் வே.பல்லவி ராஜா, கழக தொழிலாளர் அணி துணை செயலாளர் பி.விஜயகுமார் ஆகி யோர் முன்னிலையிலும் நடைபெறுகிறது.

அதுசமயம் மாநில நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், கழக பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் பொறுப்பாளர்கள், மாவட்ட, மாநகர அனைத்து அணி அமைப்பாளர்கள், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: 1. இளைஞர்களின் எழுச்சி நாயகர், கழக இளைஞர் செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 49வது பிறந்த நாள் விழா

இவ்வாறு கரூர் மாவட்டச் செயலாளர் வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.

---

# விழுப்புரம் மத்திய மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.இரா.இலட்சுமணன் எம்.எல்.ஏ. அறிக்கை!

விழுப்புரம், நவ. 22-

விழுப்புரம் மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் இரா.இலட்சுமணன் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் நவம்பர் 27 பிறந்த நாளை முன்னிட்டு விழுப்புரம் மத்திய மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் இன்று (22.11.2025 - சனிக்கிழமை) காலை 9.30 மணிக்கு விழுப்புரம் கலைஞர் அறிவாலயத்தில் உள்ள தளபதி அரங்கில் நடைபெற உள்ளது.

எனது தலைமையில் நடைபெற உள்ள இக்கூட்டத்தில் விழுப்புரம் சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர் துரை.கி.சரவணன், மாநில பொறியாளர் அணி செயலாளர், வானூர் சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர் எஸ்.கே.பி.கருணாநிதி முன்னிலை வகித்து கலந்து கொள்கிறார்கள்.



இக்கூட்டத்தில் மாநில நிர்வாகிகள், மாவட்ட பொறுப்புக்குழு உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய மற்றும் பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு விழுப்புரம் மத்திய மாவட்ட பொறுப்பாளர் டாக்டர். இரா.இலட்சுமணன் எம்.எல்.ஏ., தெரிவித்துள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவுப்படி, மண்டல பொறுப்பாளர், அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், மாவட்டக் கழக செயலாளர் , முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் ஆகியோரின் ஆலோசனையின் பேரில், விழுப்புரம் வடக்கு மாவட்டம் , மயிலம் மத்திய ஒன்றிய கழகம் சார்பில், ஒன்றிய செயலாளர் கோ.செழியன் தலைமையில், தொகுதி பொறுப்பாளர் கடலூர் இள.புகழேந்தி, கன்னியம், கொணமங்கலம், பேரணி மற்றும் செ.கொத்தமங்கலம் ஆகிய பகுதிகளில் எஸ்.ஐ.ஆர் பணிகளை ஆய்வு மேற்கொண்டார். பின்னர் பொதுமக்களிடம் விண்ணப்பப் படிவத்தை பெற்று பிஎல்ஒக்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்நிகழ்வில் பி.எல்.ஏ2 கண்ணியம் நாகராஜ், கொணமங்கலம் விஸ்வநாதன், பேரணி பிச்சாண்டி,பாக்கியராஜ், செ.கொத்தமங்கலம் பழனி ஆகியோர் உடனிருந்தனர்.

---

## நெய்வேலி தொகுதியில் ரூ.3.25 கோடியில் சாலை அகலப்படுத்துதல் –

# பள்ளி கூடுதல் வகுப்பறைகள் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டுவிழா!

## சபா.இராசேந்திரன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது!

கடலூர்,நவ,22

கடலூர் மேற்கு மாவட்டம் நெய்வேலி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட காட்டுக்கூடலூர் ஊராட்சியில் தேசிய நெடுஞ்சாலை துறையின் கீழ் 2.20 கோடி மதிப்பீட்டில் இரண்டு கிலோமீட்டர் அளவில் சாலை அகலப்படுத்துவதற்கான அடிக்கல் நாட்டுவிழா நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து நடுக்குப்பம் அரசு நடுநிலைப் பள்ளியில் தமிழ்நாடு அரசின் மாவட்ட கனிம வளத்துறை நிதியின் கீ ழ் 34. 70 லட்சம் மதிப்பீட்டில் இரண்டு வகுப்பறைகள் கொண்ட பள்ளி கட்டிடம் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டு விழா மற்றும் குடியிருப்பு முதல் கருக்கை வரை 70 லட்சம் மதிப்பீட்டில் சாலை அகலப்படுத்துவதற்கன அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது.


நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர், சபா. இராசேந்திரன் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகள் அருண் குமார், சண்முகம், வட்டார வளர்ச்சி அலுவலர் மீராகோமதி, பொறியாளர் சங்கர்,நெய்வேலி தொகுதி பார்வையாளர் பா.துரைசாமி முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் சபா.பாலமுருகன் தலைமை பொதுக்குழு உறுப்பினர் பொ. புகழேந்தி, பண்ருட்டி தெற்கு ஒன்றிய துணை செயலாளர் சுமதி நந்தகோபால், மாவட்ட பிரதிநிதி ஜெகநாதன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் பாரி, புருஷோத்தமன், சிவமணி, முன்னாள் கவுன்சிலர்கள் ஞானசேகர், அருள்முருகன், நெய்வேலி நகர இளைஞரணி அமைப்பாளர் ஸ்டாலின், அரிகிருஷ்ணன், சிவமணி, ராஜசேகர், மேலிருப்பு அன்பழகன்,முன்னாள் ஊராட்சிமன்ற தலைவர் அ.பாபு, ஜோதி, கோதண்டபாணி, அன்பழகன், செல்வராஜ், பாண்டியன், டாக்டர் செந்தில், முருகன், பூபதி, ராமச்சந்திரன் தனபால், பன்னீர் செல்வம், சண்முகம், மணிமொழி, துரைசாமி, செல்வராஜ், சிதம்பரம், தேவேந்திரன், அரசன் ,ராஜாமணி வாசுதேவன், ரங்கநாதன், சிசுபதன், பழனி, நீலமேகம், ராதாகிருஷ்ணன் சாமிதுரை, வடிவழகன், அய்யாதுரை, ராஜ வன்னியன், சதாசிவம், பழனிவேல் ,பூபதி, ஆனந்தராஜ் ,கதிர்காம வேலன், ஆறுமுகம், சிவகுமார், ஜெயவேந்திரன், பிரவீன் குமார், ராஜேந்திரன், சேகர், ரமேஷ், அருள்ஜோதி ,தங்கவேல் குணசேகர் ,ரங்கநாதன் தமிழ்ச்செல்வன், ஒப்பந்ததாரர் இராம.வெங்கடேசன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஒரத்தநாடு கு.வை.ஆண்டியப்பன்
### நவம்பர் 22 (2012)



பகுத்தறிவுக் கொள்கைகள் கொண்ட நாடகங்களில் நடித்ததன் மூலம் முத்தமிழறிஞர் கலைஞருக்கு அறிமுகமாகி, பின்னர் கழகக் கொள்கைகளை பாடல்கள் மூலம் பிரச்சாரம் செய்தவர்.

ஒரத்தநாடு ஒன்றியக் கழகச் செயலாளராக இரண்டு முறையும் – ஒன்றிய அவைத் தலைவராக இரண்டு முறையும் பொறுப்பு வகித்தவர்.

தஞ்சை மத்திய கூட்டுறவு வங்கி இயக்குநராகவும், ஊராட்சி மன்றத் தலைவராகவும் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் சிறை சென்றவர். குறிப்பாக, ‘மிசா’ கைதியாக சிறையில் இருந்தபோது தனக்கு பிறந்த ஆண் குழந்தைக்கு சிறைச்செல்வன் என்று பெயரிட்டு மகிழ்ந்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**